செய்தி மாலை

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்

மடல்-58 அக்டோபர், 2025

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளன நிர்வாகிகள் கூட்டம் - 03-09-2025

மாநிலம் முழுவதும் சிறப்புக் கூட்டங்கள் நடத்திட முடிவு

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் நிர்வாகிகள் கூட்டம் **03-09-2025** அன்று சென்னை தாரக் இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சம்மேளனத்தின் அவைத்தலைவர் தோழர் **G** வைரப்பன் மற்றும் சம்மேளனத்தின் தலைவர் தோழர் **A** சிதம்பரம் ஆகியோர் தலைமை தாங்கினர்.

வாரத்தில் ஐந்து நாட்கள் வங்கிச் சேவை, கிளைகளில் போதுமான ஆட்சேர்ப்பு, வங்கி ஊழியர்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருவது, **PLI** திட்டத்தில் அரசாங்கத்தின் ஒருதலைப்பட்சமான அறிவிப்பு போன்ற முக்கியமான பிரச்சினைகள் குறித்து **UFBU** வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்ததிலிருந்து ஏற்பட்ட முன்னேற்றங்கள் குறித்து அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் விரிவாக அறிக்கை அளித்தார்.



கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் மாநாட்டு முடிவுகள் மற்றும் தீர்மானங்கள் மற்றும் அவற்றின் மீதான தொடர் நடவடிக்கை மேற்கொள்வது குறித்து சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாச்சலம் அவர்கள் விரிவாக எடுத்துரைத்தார்.

நிர்வாகிகளின் விரிவான விவாதங்களுக்குப் பிறகு, பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன:

- தொழிற்சங்க பயிற்சி திட்டம்: செப்டம்பர் **9** மற்றும் **10** ஆகிய தேதிகளில் துறை ரீதியான விசாரணைகள் குறித்த சிறப்பு தொழிற்சங்கப் பயிலரங்கம் அதனைத் தொடர்ந்து பெண் பணியாளர்கள் மற்றும் கூட்டுறவு வங்கி தொழிற்சங்கங்க உறுப்பினர்களுக்கான பிரத்யேக தொழிற்சங்கப் பயிற்சி வகுப்புகள் நடத்திட முடிவு செய்யப்பட்டது.

- இதுகாறும் மாநாடு நடைபெறாத மாவட்ட மற்றும் நகர வங்கி ஊழியர் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கங்கள் உட்பட அனைத்து இணைப்பு சங்கங்களும் தங்கள் மாநாட்டை தாமதமின்றி நடத்தவேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது.

- தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி ஊழியர்கள் ஓய்வு பெறும் தற்போதைய **58** வயதினை நீக்கி மற்ற வங்கி ஊழியர்களைப் போன்று **60** வயதாக ஆக்கிட வலியுறுத்தி தர்ணா உட்பட போராட்டங்களை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

- கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு ஓய்வூதியம் கோரி சென்னையில் மாநில அளவிலான தர்ணாவை நடத்திட முடிவு செய்யப்பட்டது.



- வங்கி முகவர்கள் (**BANKING CORRESPONDENTS**) சந்திக்கும் பிரச்சினைகளை விவாதித்து தீர்வுகாணும் வகையில், சம்மேளனத்துடன் இணைந்த தமிழ்நாடு வங்கி முகவர்கள் சங்கத்தின் மாநில மாநாட்டை திருச்சியில் நடத்திட முடிவு செய்யப்பட்டது.

- சமீபத்திய ஆண்டுகளில், மாநில அரசினால் சில மாவட்டங்களைப் பிரித்து புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவ்வாறு உருவான மாவட்டங்களில் புதிய மாவட்ட வங்கி ஊழியர் சங்கங்களை ஸ்தாபிக்க முடிவு செய்யப்பட்டது.

- கொடைக்கானலில் அமைந்துள்ள பஞ்சாப் & சிந்து வங்கி ஊழியர் சங்கத்தின் விடுமுறை இல்லத்தினை (**HOLIDAY HOME**) அனைத்து வங்கித் தொழிற்சங்கங்க உறுப்பினர்களும் பயன்படுத்திக்கொள்ளும் வகையில், கட்டிடத்தினை புதுப்பிக்கும் பணியினை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் மேற்கொள்ளும்.

- அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் **80**வது ஆண்டு நிறைவை குறிக்கும் விதமாகவும், நமது இயக்கத்தின் முன்னோடித் தலைவர்கள் தோழர் தாரகேஸ்வர் சக்ரவர்த்தி, தோழர் **N** சம்பத் மற்றும் தோழர் **M S** தாவூத் ஆகியோரின் நூற்றாண்டினை நினைவுகூரும் வகையிலும் மாநிலத்தின் பல்வேறு மையங்களில் நமது சங்க உறுப்பினர்கள் பங்கேற்கும் சிறப்புக் கூட்டங்கள் நடத்திட முடிவு செய்யப்பட்டது.

- இக்கூட்டங்கள் அக்டோபர், 2025 முதல் மார்ச், 2026 வரை தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள 100 நகரங்களில் நடைபெறும். இக்கூட்டங்களில் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் மற்றும் வங்கிவாரி தொழிற்சங்கங்களின் நிர்வாகிகள் பங்கேற்பார்கள்.



மேலும், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் 80வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் மாநிலமெங்கும் உள்ள வணிக வங்கிகள், RRB மற்றும் கூட்டுறவு வங்கிகளின் சுமார் 8,000 வங்கிக் கிளைகளில் 2026, ஜனவரி மாதம் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் கொடியினை ஏற்றவும் முடிவு செய்யப்பட்டது.

வங்கிப் பணியாளர்கள் மற்றும் ஓய்வு பெற்றவர்களுக்கு 2025-26 ஆண்டுக்கான ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீடு புதுப்பித்தல்

பணியில் உள்ள ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளுக்கான குழு மருத்துவக் காப்பீடு (GROUP MEDICAL INSURANCE) செப்டம்பர் 30, 2025 அன்றும், ஓய்வு பெற்றவர்களுக்கான மருத்துவக் காப்பீடு அக்டோபர் 31, 2025 அன்றும் முடிவடைவதால் இவற்றை 2025-26 ஆண்டுக்காக புதுப்பிக்கப்படுவது குறித்த ஆலோசனை IBA-வுடன் தொடர்ந்து நடைபெற்று வந்தது.



ஓய்வூதியதாரர்களுக்கான பிரீமியத் தொகையினை குறைக்கும் நோக்கில், பணியில் உள்ள ஊழியர்கள் மற்றும் ஓய்வு பெற்றவர்களின் மருத்துவக் காப்பீட்டினை ஒருங்கிணைக்க UFBU மற்றும் AIBEA இப்பேச்சுவார்த்தையின்போது IBAவை வலியுறுத்தியது.

புதுப்பிக்கப்படும் காப்பீட்டுத் தொகை, காப்பீட்டில் சில நோய்கள் / சிகிச்சைகளைச் சேர்த்தல், ஓய்வு பெற்றவர்களைச் சார்ந்திருக்கும் உடல் /மனக்குறைபாடுகள் உள்ளவர்களைச் சேர்க்கும் விருப்பம், TOPUP வசதியில் சில மேம்பாடுகளைச் செய்யவும், CORPORATE BUFFER தொகை ரூ 125 கோடியாக அதிகரிக்கவும் இப்பேச்சுவார்த்தையில் ஒப்புக்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் இதற்கான காப்பீட்டு நிறுவனம் மற்றும் பிரீமியத் தொகைகள் இறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த 13-06-2025 அன்று IBA மற்றும் UFBU இடையே நடைபெற்ற இருதரப்புப் பேச்சுவார்த்தைகளில் கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி தற்போது வங்கிப் பணியில் உள்ள ஊழியர்கள் மற்றும் ஓய்வு பெற்றவர்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீடு தொடரும் வகையில் புதுப்பித்திட ஒப்புக் கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீடு பெறுவதற்காக, தற்போது பணியிலுள்ள ஊழியர்களுக்கான காப்பீடு **31-10-2025** வரை நீட்டிக்கப்பட்டு, ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீடு **1-11- 2025** முதல் புதுப்பிக்கப்பட உள்ளது.

2025-26க்கான ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீடு பாலிசிக்கான பிரீமியம் பின்வருமாறு:

	FOR IN SERVICE EMPLOYEES	FOR IN SERVICE OFFICERS	
	CLERKS / SUB STAFF	UPTO SCALE-V	SCALE-VI & ABOVE
POLICY AMOUNT	Rs 4 LACS	Rs 5.25 LACS	Rs 7 LACS
PREMIUM	Rs 31,001	Rs 40,231	Rs 60,001

	FOR RETIRED EMPLOYEES		FOR RETIRED OFFICERS		
	WITH SPOUSE		WITH SPOUSE		
POLICY	Rs 3 LACS	Rs 4 LACS	UPTO SCALE-V	SCALE-VI & ABOVE	
			Rs 5.25 LACS	Rs 5.25 LACS	Rs 7 LACS
PREMIUM	Rs 27,001	Rs 31,001	Rs 40,231	Rs 40,231	Rs 60,001
	WITHOUT SPOUSE		WITHOUT SPOUSE		
	Rs 3 LACS	Rs 4 LACS	UPTO SCALE-V	SCALE-VI & ABOVE	
			Rs 5.25 LACS	Rs 5.25 LACS	Rs 7 LACS
PREMIUM	Rs 24,301	Rs 29,251	Rs 37,181	Rs 37,181	Rs 48,001

OPTIONAL - ADD ON FOR RETIREES			
FOR DEPENDANT PHYSICALLY OR MENTALLY CHALLENGED CHILDREN OF RETIREES		TOP UP POLICY	
INSURANCE COVER	PREMIUM	INSURANCE COVER	PREMIUM
FOR Rs 3.00 LACS	Rs 10,001	FOR Rs 1.00 LACS	Rs 5,001
FOR Rs 4.00 LACS	Rs 12,501	FOR Rs 2.00 LACS	Rs 10,001
FOR Rs 5.25 LACS	Rs 15,001	FOR Rs 3.00 LACS	Rs 20,001
FOR Rs 7.00 LACS	Rs 35,001	FOR Rs 4.00 LACS	Rs 30,001
NOTE: ALL PREMIUM RATES ARE WITHOUT GST AND WITHOUT DOMICILLIARY COVERAGE			

ஓய்வூதியதாரர்களுக்கு குழு காப்பீட்டிற்கான பிரீமியத்திற்கு **GST**-யிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்ற அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் கோரிக்கையினைத் தொடர்ந்து இது குறித்து **DFS, CBDT** மற்றும் **GST COUNCIL** ஆகியவற்றிடம் வலியுறுத்தியுள்ளதாக **26-09-2025** அன்று **UFBU**வுடன் நடைபெற்ற இருதரப்புக் கூட்டத்தில் **IBA** தெரிவித்துள்ளது.

ஓய்வுபெற்ற எழுத்தர்/துணை நிலை ஊழியர்கள் ரூ **3** லட்சம் அல்லது ரூ **4** லட்சத்திற்கான அடிப்படை மருத்துவக் காப்பீடும், ஓய்வுபெற்ற அதிகாரிகள் **SCALE I to V** - ரூ **5.25** லட்சம், **SCALE VI & ABOVE** - ரூ **5.25** லட்சம் அல்லது ரூ **7** லட்சத்திற்கான அடிப்படை மருத்துவக் காப்பீடும் தேர்வு செய்யலாம். இதுவரை குழு மருத்துவக் காப்பீட்டில் சேராத ஓய்வு பெற்றவர்களுக்கு இப்போது புதிதாக இணைந்திட வாய்ப்பு வழங்கப்படும்.

தோழர் N சம்பத் நூற்றாண்டு நினைவு தொழிற்சங்கப் பயிலரங்கு துறை ரீதியான விசாரணைகளை எதிர்கொள்வது குறித்த பயிற்சி முகாம்

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் 80வது ஆண்டு மற்றும் தோழர் தாரகேஸ்வர் சக்ரவர்த்தி, தோழர் N சம்பத் மற்றும் தோழர் M S தாவூத் ஆகியோரின் நூற்றாண்டு விழாவை நினைவுகூரும் வகையில் ஊழியர்களைப் பாதுகாத்தல் மற்றும் துறை ரீதியான விசாரணைகள் குறித்த நமது சங்கத்தின் இளம் தலைவர்களுக்கான தொழிற்சங்கப் பயிலரங்கு 2025 செப்டம்பர் 9 மற்றும் 10 தேதிகளில் சென்னையில் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.



நமது சங்கத்தின் எதிர்காலத் தலைவர்களுக்கு தொழிற்சங்கக் கல்வி மற்றும் பயிற்சி அளிப்பதற்கான முயற்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற இப்பயிற்சிப் பட்டறையில் பல்வேறு இணைப்பு வங்கித் தொழிற்சங்கங்கள் மற்றும் மாவட்ட சங்கங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் என 6 பெண் தோழர்கள் உட்பட 45 தோழர்கள் ஆர்வத்துடன் பயிலரங்கில் பங்கேற்று பயனடைந்தனர்.

இப் பயிற்சி முகாமில் ஊழியர்களைப் பாதுகாக்கும் வகையில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தினால் ஆரம்பகாலம் தொட்டு வென்றெடுத்துள்ள இருதரப்பு ஒப்பந்தத்தின் விதிமுறைகள் குறித்து அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் C H வெங்கடாசலம் அவர்களும், ஊழியர்களை திறம்பட எவ்வாறு பாதுகாப்பது என்பது குறித்து சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் E அருணாசலம் அவர்களும், இருதரப்பு ஒப்பந்தத்தில் உள்ள வழிமுறைகளை கடைபிடித்து துறை ரீதியான விசாரணைகளை திறம்பட நடத்துவது குறித்து சம்மேளனத்தின் சட்டக்குழு பொறுப்பாளர்கள் தோழர் S D ஸ்ரீநிவாசன் மற்றும் தோழர் K கோவிந்தராஜ் ஆகியோர் வகுப்புக்களை எடுத்தனர்.



அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் தொடர் முயற்சிகள் வாயிலாக இருதரப்பு ஒப்பந்தங்கள் மூலம் வங்கி ஊழியர் பெற்றுள்ள பணிப் பாதுகாப்பு நடைமுறைகளை நம் சங்கப் பொறுப்பாளர்கள் முறையாகப் பயின்று, ஊழியர்களுக்கு எதிரான, வங்கி நிர்வாகங்களின் குற்றப்பத்திரிகைகள், இடைநீக்கங்கள் மற்றும் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கைகளை எதிர்கொண்டு எவ்வாறு உறுப்பினர்களை பாதுகாக்க வேண்டும் என்று தோழர் S D சீனிவாசன் மற்றும் மற்றும் தோழர் K கோவிந்தராஜ் ஆகியோர் விளக்கினர்.

பயிலரங்கில் உரையாற்றிய சம்மேளனத்தின் தொழிற்சங்க பயிற்சி வகுப்புகளின் பொறுப்பாளர் தோழர் **V** இரகுராமன் அவர்கள், இதனைப் போன்ற பயிலரங்கங்களில் இளம் உறுப்பினர்கள் ஆர்வமுடன் பங்கேற்று தங்களை தொழிற்சங்கப் பணிகளில் முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு, எதிர்கால தலைவர்களாக உருவாக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.



எதிர்வரும் நாட்களில் வணிகவங்கி மற்றும் கூட்டுறவு வங்கி ஊழியர் தொழிற்சங்கங்க நிர்வாகிகள், பெண் பணியாளர்கள் மற்றும் புதிய உறுப்பினர்களுக்கான இதுபோன்ற தொழிற்சங்கப் பயிலரங்கங்கள் நடத்திட தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் முடிவு செய்துள்ளது என்று தோழர் **V** இரகுராமன் அவர்கள் அறிவித்தார்.

இப்பயிலரங்கில் பங்கேற்ற பிரதிநிதிகள், இதனைப் போன்ற தொழிற்சங்க வகுப்புகளில் பங்கேற்பது தொழிற்சங்க இயக்கத்தில் பணியாற்றும் புதிய தோழர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் என்றும், எதிர்வரும் நாட்களில் மேலும் பல்வேறு பயிற்சி வகுப்புகளை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் நடத்திடவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தனர்.





"தொழிற்சங்க உறுப்பினர்கள் ஒரே இரவில் தலைவர்களாகிவிட முடியாது. நமது உறுப்பினர்களை தொழிற்சங்க நடவடிக்கைகளில் திறம்பட செயல்பட வைத்து, அவர்களை விழிப்புணர்வுள்ள தொழிற்சங்க ஊழியர்களாக உருவாக்கிட வேண்டும். எனவே நமது தோழர்களை முறையாகப் பயிற்றுவித்து, அவர்களை சங்கத்தின் எதிர்காலத் தலைவர்களாக உருவாக்குவது காலத்தின் தேவையாகும்" - தோழர் **N** சம்பத்

கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கச் செய்திகள்

RBI சென்னை மண்டல அதிகாரிகளுடன் நமது சங்க தலைவர்கள் சந்திப்பு
கூட்டுறவு வங்கிகளின் பிரச்சினைகள் குறித்து வலியுறுத்தல்

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம், தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாச்சலம் ஆகியோருடன் தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்க நிர்வாகிகள் **08.09.2025** அன்று ரிசர்வ் வங்கி சென்னை மண்டல அலுவலக பொது மேலாளரை (மேற்பார்வை பிரிவு) சந்தித்தனர்.

இச்சந்திப்பின்போது தமிழகத்திலுள்ள கூட்டுறவு வங்கிகள் கடந்த காலங்களில் நாட்டிலுள்ள ஏனைய கூட்டுறவு வங்கிகளுக்கு எடுத்துக்காட்டு வங்கிகளாக திகழ்ந்ததையும், தற்போது அரசியல் மற்றும் துறை அதிகாரிகளின் தலையீடுகள் காரணமாக வங்கிகளின் செயல்பாடுகளில் தொய்வு நிலைகள் ஏற்பட்டுள்ளதும் எடுத்துரைக்கப்பட்டது.



எனவே தமிழகத்தில் கூட்டுறவு வங்கிகள் நலன் காக்கப்பட இவ்வங்கிகளில் அரசியல் தலையீடுகள் முற்றிலும் தவிர்க்கப்படவும், கூட்டுறவு வங்கிகளில் முதன்மை நிர்வாக அதிகாரிகள் (**CEO**) ரிசர்வ் வங்கி அறிவுறுத்தியுள்ள '**FIT AND PROPER CRITERIA**' முறையிலும், **2020**-ல் திருத்தப்பட்ட வங்கியியல் ஒழுங்குமுறைச் சட்டம் **1949**-ன் படி நியமனம் செய்யப்பட வேண்டுமென்பதையும் ரிசர்வ் வங்கி உறுதி செய்திட வேண்டுமென்று அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் வலியுறுத்தினார்.

மேற்கண்ட நமது கோரிக்கைகளை கவனமுடன் கேட்டுக்கொண்ட ரிசர்வ் வங்கியின் அதிகாரிகள் இதுகுறித்து உயர் அதிகாரிகளுடன் விவாதிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று உறுதியளித்துள்ளனர்.

கூட்டுறவு வங்கிகளில் நமது இணைப்பு சங்கங்கள் போராட்டம்



17.09.2025 அன்று கன்னியாகுமரி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி நிர்வாகத்தின் ஊழியர் விரோத போக்கினைக் கண்டித்து **கன்னியாகுமரி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கம்** கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியது. இதைத் தொடர்ந்து கடந்த மாதம் 26.09.2025 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட உடன்படிக்கையை தொடர்ந்து ஏனைய போராட்ட நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

TNSC வங்கியில் 24.09.2025 அன்று நடைபெற்ற ஒருநாள் வேலைநிறுத்தம்

வங்கித் தலைமையகம் மற்றும் கிளைகளில் பணிகள் முழுவதுமாக முடக்கம்



தமிழக அரசின் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையிலிருந்து வெளியிடப்பட்ட அரசாணையில் (2D எண்.43, நாள் 22.09.2025) அந்த வங்கியிலுள்ள மூன்று பொது மேலாளர் பணிகளும் இணைப் பதிவாளர்களுக்கே உரியதென்றும் அதில் ஒன்று மட்டும் வங்கி ஊழியர்களில் ஒருவருக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அவ்வாணையில் பொது மேலாளர் (கடன்) பொறுப்பிற்கு இணைப்பதிவாளர் ஒருவரை நியமனம் செய்திட பதிவாளர் கோரியுள்ளதாகவும் அதன் அடிப்படையில் இணைப்பதிவாளர் ஒருவரை நியமிக்க அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேற்கண்ட அரசாணை உண்மை நிலைக்கு மாறானதாகும்.

இதே பிரச்சினை கடந்த 2008 ஆம் ஏற்பட்டபோது அதை எதிர்த்து அன்றும் அவ்வங்கி ஊழியர்கள் FLASH STRIKE செய்தபின் அரசுத் துறை செயலாளர் நமது தொழிற்சங்கங்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி அந்த ஆணையை விலக்கிக் கொண்டார். மீண்டும் 17 ஆண்டுகள் கழித்து அதே பிரச்சினையை பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்தியுள்ளது. இவ்வாணை ஊழியர்கள் மத்தியில் பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இவ்வாணையை எதிர்த்து 24.09.2025 அன்று ஒருநாள் வேலைநிறுத்தத்திற்கு அங்குள்ள நமது இணைப்பு சங்கத்தால் அறைகூவல் விடுக்கப்பட்டது.

இவ்வேலைநிறுத்தம் **TNSC** வங்கியில் முழு வெற்றி பெற்றுள்ளது. வங்கித் தலைமையகம் மற்றும் கிளைகளில் அனைத்து பணிகளும் முற்றிலும் முடக்கப்பட்டன. மேலும் **250**க்கும் மேற்பட்ட தோழர்கள் வங்கித் தலைமையகம் முன்பாக அடையாள தர்ணாவும் நடத்தினர். **24.09.2025** அன்று காலை **8.00** மணியளவில் முடிவு செய்யப்பட்டு அலைபேசி வாயிலாக உறுப்பினர்களுக்கு விடுக்கப்பட்ட அறைகூவலை ஏற்று ஊழியர்கள் முழு அளவில் இந்த வேலைநிறுத்தத்தில் முழு எழுச்சியுடன் பங்கேற்றது அவ்வங்கியில் ஊழியர்களுடைய ஒற்றுமை உணர்வுகளையும், அவர்களின் போராட்ட குணத்தையும் பறைசாற்றியுள்ளது.



இவ்வேலைநிறுத்தத்தை தொடர்ந்து வங்கி நிர்வாக இயக்குநர் மற்றும் பொது மேலாளருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் அரசு தனது நிலையை மாற்றிக் கொண்டு வங்கியின் நலன், பணியாளர் நலனை கருத்தில் கொண்டு செயல்பட வங்கி நிர்வாகம் கூட்டுறவு சங்க பதிவாளரிடமும், அரசு கூட்டுறவு துறை செயலாளரிடமும் வலியுறுத்த வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் செயற்குழுக் கூட்டம் – திருவண்ணாமலை

கடந்த **28.09.2025** அன்று தமிழ்நாடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் செயற்குழுக் கூட்டம் திருவண்ணாமலை நகரில் நடைபெற்றது. மாநிலம் முழுவதும் சுமார் **120** தோழர்கள் இதில் பங்கேற்றனர். மாநில சங்கத்தின் பொதுச் செயலாளர், திருவண்ணாமலை மத்தியக் கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் எம்.யுவராஜ், சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரவிச்சந்திரன் ஆகியோரும் பங்கேற்றனர்.



பதிவாளர் ஆணையின் அடிப்படையில் ஏற்கனவே ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டுவரும் நிலையில் பதிவாளர் மீண்டும் ஒரு ஆணை பிறப்பித்து ஏற்கனவே பெற்றுவந்த **HRA** மாற்றியமைத்துள்ளதற்கு இக்கூட்டத்தில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.



எனினும் கடந்த **26.09.2025** அன்று பதிவாளருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இப்பிரச்சனை குறித்து எடுத்து வைத்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு நமது இணைப்பு சங்கங்கள் ஒப்பந்தங்களை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் ஓய்வூதியம் உள்ளிட்ட நிலுவையிலுள்ள கோரிக்கைகள் குறித்தும், இக்கூட்டத்தில் சங்கத்தை மேலும் வலுப்படுத்தவது குறித்தும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

உலகத் தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தின் (WFTU) 80 வது ஸ்தாபன தினம் - 03 அக்டோபர் 2025 உலகளாவிய செயல் நாளாக அனுசரிக்க அறைகூவல்

கண்ணியமான வேலை மற்றும் பாதுகாப்பான வாழ்க்கைச் சூழலை வென்றெடுக்க சபதமேற்போம் !

உலகத் தொழிலாளி வர்க்கத்தின் முதல் சர்வதேச தொழிற்சங்க அமைப்பான உலகத் தொழிற்சங்க கூட்டமைப்பு (**WFTU**) **1945** ஆம் ஆண்டு அக்டோபர் **3** ஆம் தேதி பிரான்சின் தலைநகரான பாரிஸ் நகரில் நிறுவப்பட்டது. **WFTU** இன் ஸ்தாபக மாநாட்டில் **55** நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டு **67** மில்லியன் தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தினர். இன்று **WFTU** அமைப்பில் **110** மில்லியனுக்கும் அதிகமான உறுப்பினர்கள் உள்ளனர்.



உலகத் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு (**WFTU**) ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் **3** ஆம் தேதியன்று, அதன் ஸ்தாபன நாளினைக் குறிக்கும் விதமாக, தொழிலாளர்களின் சர்வதேச நடவடிக்கை தினமாக (**INTERNATIONAL DAY OF ACTION**) அனுசரித்து வருகின்றது.

03-10-2025 அன்று உலகத் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு அதன் **79** வது ஆண்டினை நிறைவு செய்து **80**வது நிறுவன ஆண்டில் அடியெடுத்து வைக்கும் வரலாற்று நிகழ்வில், உலகெங்கிலும் உள்ள தொழிலாளி வர்க்கம் மற்றும் வர்க்கம் சார்ந்த தொழிற்சங்கங்கள், மகத்தான போர்க்குணமிக்க செயல்பாடுகளுடன் இந்த நாளைக் அனுசரிக்க **WFTU** அறைகூவல் விடுத்துள்ளது.

உலகம் முழுவதும் முதலாளித்துவ சக்திகள், தொழிலாளர்களின் ஊதியம், ஓய்வூதியம், சமூகப் பாதுகாப்பு மற்றும் வேலைநிறுத்தம் செய்யும் உரிமை ஆகியவற்றை தடை செய்ய முயற்சிக்கும் காலகட்டத்தில். இத்தகைய தாக்குதல்களை எதிர்கொண்டு, போர்க்குணமிக்க போராட்டங்களை **WFTU** தலைமையில் உலகெங்கிலும் உள்ள தொழிலாளி வர்க்கம் முன்னெடுக்கின்றது.

இந்தப் போராட்டங்கள், கண்ணியமான வேலை, ஊதியம் மற்றும் வாழ்க்கை நிலைமைகளை உறுதிப்படுத்தி, அனைத்து மட்டங்களிலும் உள்ள தொழிலாளர்களின் சமகால தேவைகளை பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இதுகாறும் அடைந்திட்ட தொழிலாளர்களின் சாதனைகளும், சலுகைகளும், தொழிலாளர்களும் அவர்களது தொழிற்சங்கங்களும் வர்க்க ஒற்றுமை, மற்றும் ஒன்றுபட்ட போராட்ட நடவடிக்கைகள் மூலம், முதலாளிகளையும், முதலாளித்துவ அரசாங்கங்களையும் பணியச் செய்து சாதித்தவையே என்பது வரலாற்று ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.



அதே நேரத்தில், முதலாளித்துவம் தொடர்ச்சியாக சந்தித்துவரும் நெருக்கடிகள் மற்றும் ஏகாதிபத்திய மையங்களுக்கு இடையிலான கடுமையான போட்டிகளுக்கு மத்தியில், சர்வதேசியம் மற்றும் ஒற்றுமை ஆகியவற்றினைப் பேணி, முதலாளித்துவத்திற்கு எதிரான தொழிலாளர்களின் போராட்டங்களும், ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு மற்றும் தலையீடுகளுக்கு எதிரான மக்கள் போராட்டங்களுமே தொழிலாளர்கள் வசம் உள்ள வலிமையான ஆயுதங்களாகும் என்று **WFTU** நம்புகின்றது.

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் தொழிலாளர்களுடைய உற்பத்தித்திறனை தொடர்ந்து மேம்படுத்தும் இக்காலகட்டத்தில், உற்பத்தி செய்யப்பட்ட செல்வம் அனைத்தையும் முதலாளித்துவ இலாபத்திற்காக ஒதுக்குவது சமூக ரீதியாக அநீதியானது.

இச்செல்வத்தினை, போரை ஊக்குவிப்பதற்கும், இராணுவ செலவினங்களுக்கும் பயன்படுத்துவது மனிதகுலத்திற்கு எதிரானதாகும். சமூகத்தின் உற்பத்தி திறன்களைப் பயன்படுத்தி, உலகளவில் அனைத்து தொழிலாளர்களின் வேலை நிலைமைகளை மேம்படுத்துவதற்கு **WFTU** உறுதியாகப் போராடுகிறது.

குறைவான வேலை நேரம், நியாயமான ஊதியம், தரமான சுகாதார வசதி, கல்வி மற்றும் சமூகப் பாதுகாப்பு, கண்ணியமான மற்றும் பாதுகாப்பான வேலை மற்றும் வாழ்க்கைச்சூழல் ஆகியவற்றுடன் தொழிலாளருடைய பணி மற்றும் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதே நம் போராட்டங்களின் இலக்காகும்.

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிலைமைகள் துணையுடன் தொழிலாளி வர்க்கம் உழைப்பை அளித்து உற்பத்தி செய்யும் செல்வத்தை முதலாளித்துவ சக்திகள் சூறையாடுவதை தடுத்து, அவை தொழிலாளி வர்க்கத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் மாற்றிட வேண்டும். உலக தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு, அதன் 80 ஆண்டுகால இடைவிடாத பங்களிப்பில், உலகெங்கிலும் உள்ள தொழிலாளர்களின் நலனுக்காக தீவிரமான மற்றும் போர்க்குணமிக்க போராட்டங்களில் தொடர்ந்து முன்னணியில் இருந்து வருகிறது.

WFTU, அதன் 80வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் உலகெங்கிலும் உள்ள வர்க்கம் சார்ந்த தொழிற்சங்கங்களை, கீழ்க்காணும் கோரிக்கைகளை வென்றெடுக்க போர்க்குணமிக்க நடவடிக்கைகளைக் மேற்கொள்ள அழைப்பு விடுக்கிறது:

கண்ணியமான வேலை மற்றும் வாழ்க்கை நிலைமைகள்.
நியாயமான ஊதியம் மற்றும் முழு உரிமைகளுடன் நிலையான வேலை உத்திரவாதம்.
சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்ட பணியிடம்.
தரமான கல்வி, சமூகப் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைச் சூழல்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் WFTU-வில் இன்றளவும் தீவிரமான பங்களிப்புடன் செயல்பட்டு வருகிறது. உலகத் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் 80வது ஆண்டு விழா பிரான்சு நாட்டின் பாரிஸ் நகரில் அக்டோபர் 3 மற்றும் 4, 2025 ஆகிய தேதிகளில் நடைபெறுகின்றது. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் C H வெங்கடாசலம் அவர்கள் தலைமையில் AIBEAவின் பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர்.

சர்வதேச வர்க்கம் சார்ந்த தொழிற்சங்க இயக்கத்தின் 80வது ஆண்டு நிறைவை, தொழிலாளர்களின் எதிர்பார்ப்புகளை உறுதிசெய்யும் போராட்டங்களுடன் கூடிய போர்க்குணமிக்க நாளாக அனுசரிப்போம் என்று உலகத் தொழிற்சங்க சம்மேளனம் (WFTU) அறைகூவல் விடுத்துள்ளது.

நம் தலைவர்களின் தியாக வரலாற்றினைப் போற்றி நினைவு கூர்வோம்

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் தன்னிகரில்லா தலைவர்
தோழர் பிரபாத்கரின் 116 வது பிறந்த நாளில்
ஸ்தாபனத்தை மென்மேலும் பலப்படுத்த உறுதியேற்போம் !
(13 OCTOBER 1910 – 13 OCTOBER 2025)

வங்கி ஊழியர்களின் நெஞ்சினில் என்றென்றும் வாழும் தோழர் பிரபாத்கர்

வங்கி ஊழியர் இயக்கத்தின் ஒப்பற்ற தலைவராக இருந்து நமது அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தினை வலிமைமிக்க தொழிற்சங்க இயக்கமாக பரிணமிக்கச் செய்த தோழர் பிரபாத்கரின் 116வது பிறந்த நாளில் நாம் அனைவரும் அவரை நினைத்துப் பெருமிதம் கொள்வோம்.

தோழர் பிரபாத்கர் இவ்வுலகில் வாழ்ந்த எழுபத்து நான்கு வருடங்களின் பெரும் பகுதியினை வங்கி ஊழியர் மேம்பாட்டிற்காக அர்ப்பணித்தார் என்பதை அனைத்து வங்கி ஊழியரும் அறிவோம்.



அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தை கட்டமைத்தவராக மட்டுமின்றி, சங்கத்தினை தன் வாழ்நாள் முழுமையும் வழி நடுத்தியவராகவும் தோழர் பிரபாத்கர் விளங்கினார்.

கொல்கத்தா நகரில் 1933ம் ஆண்டு லாயிட்ஸ் வங்கியில் எழுத்தராக வங்கிப் பணியில் இணைந்தபோது, வங்கி ஊழியர்களுக்கென எந்தவொரு அடிப்படையான பணிவிதி முறைகளோ, தொழிற்சங்கமோ இன்றி வங்கி முதலாளிகளால் அடிமை போல் நடத்தப்பட்ட அவலமான நிலைமையினை மாற்றிட முனைந்து, 1933 முதல் 1946ம் ஆண்டு வரை வங்கி ஊழியர்களை ஒன்றிணைக்கும் முயற்சிகளில் தோழர் பிரபாத்கர் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார்.

வங்கி ஊழியர் கலங்கரை விளக்கமாக அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் உதயம்

தொழிற்சங்க அர்ப்பணிப்பு கொண்ட இளம் வங்கி ஊழியர்களை ஒன்றுபடுத்தி, வங்கி ஊழியர்களுக்கான அகில இந்திய அமைப்பினை உருவாக்கவேண்டும் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவினை 1941ம் ஆண்டு ஆகஸ்ட் 9ம் நாளன்று தோழர் பிரபாத்கர் அறிவித்தார்.

அவருடைய முயற்சியின் விளைவாக 1946ம் ஆண்டு ஏப்ரல் 20ம் நாளன்று அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் கொல்கத்தா நகரில் ஸ்தாபிக்கப்பட்டது. வங்கித் துறைக்கென ஒரே சங்கமாக அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் விளங்கிடவேண்டுமென்ற ஒரே வேட்கையுடன், தோழர் பிரபாத்கர் தொடர்ந்து பாடுபட்டு அனைத்து ஊழியர்களையும் ஒரே குடையின் கீழ் கொண்டுவரும் முயற்சியில் அயராது ஈடுபட்டார்.

ஜஸ்டிஸ் சென் முத்தரப்பு தீர்ப்பினை (SEN AWARD) சென்ட்ரல் வங்கியில் அமல்படுத்திட வேண்டி 1948ம் வருடம், கொல்கத்தாவில் சென்ட்ரல் வங்கி ஊழியர்கள் காலவரையறையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போதைய வங்காள மாகாண வங்கி ஊழியர் சங்கத்தின் (BPBEA) பொதுச் செயலராக இருந்த தோழர் பிரபாத்கர் இப்போராட்டத்திற்கு ஆதரவாக, ஆகஸ்ட் 17, 1948 அன்று கொல்கத்தாவிலுள்ள அனைத்து வங்கி ஊழியர்களையும் வேலைநிறுத்தம் அனுசரிக்க அறைகூவல் விடுத்து, அதனைத் தலைமையேற்று நடத்தியமைக்காக தோழர் பிரபாத்கரை, லாயிட்ஸ் வங்கி தற்காலிகப் பணிநீக்கம் செய்தது.

இவ்வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட அனைத்து ஊழியர்களையும் லாயிட்ஸ் வங்கி நிர்வாகம் 27அக்டோபர் , 1948ம் நாளன்று பணி நீக்கம் செய்தது. அதனை எதிர்த்து சுமார் பத்து ஆண்டுகள் நடைபெற்ற சட்டப் போராட்டத்திற்குப் பின்பு, உச்ச நீதிமன்ற உத்தரவின்படி, தோழர் பிரபாத்கர் தவிர மற்ற ஊழியர்கள் பணியில் மீண்டும் சேர்க்கப்பட்டனர்.

வங்கி ஊழியர் நலனே தன் வாழ்வின் இலட்சியமாகக் கொண்ட தோழர் பிரபாத்கர்

முப்பத்து எட்டே வயதான தோழர் பிரபாத்கர், அன்றிலிருந்து வங்கி ஊழியர் இயக்கத்திற்காகப் போராடுவதை தன் வாழ்நாள் இலட்சியமாகக் கொண்டார். 1953ம் ஆண்டு லக்னோ நகரில் நடைபெற்ற அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் ஐந்தாவது மாநாட்டினில் பொதுச் செயலாளராகத் தேர்வு செய்யப்பெற்ற தோழர் பிரபாத்கரின் வாழ்க்கை முழுமையுமே அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் ஒரு அங்கமாக மாறியது.

1953 முதல் 1966ம் ஆண்டுவரை அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் மேற்கொண்ட தீவிரமான போராட்டக் களத்தின் தளகர்த்தராக தோழர் பிரபாத்கர் விளங்கினார். இக்காகலகட்டத்தில் நமது சங்கம் மிகப்பெரும் சக்தியாக உருவெடுத்ததுடன், தோழர் பிரபாத்கர் தலைமையில் கடுமையான போராட்டங்களை சட்ட ரீதியாகவும், அமைப்பு ரீதியாகவும் கையிலெடுத்தது. அதே சமயம் 1957ம் ஆண்டு தோழர் பிரபாத்கர் கொல்கத்தாவின் ஹூக்லி தொகுதியிலிருந்து பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தோழர் பிரபாத்கரின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி நமது இயக்கத்திற்கு பேருதவியாக அமைந்ததன் வாயிலாக, நலிவுறும் வங்கிகளை மூடுவதற்கு பதிலாக பிற வங்கிகளுடன் இணைக்க வேண்டும் என்ற முக்கியமான சட்டப் பிரிவினை வங்கிகள் கம்பெனி சட்டத்தில் திருத்தம் கொண்டுவரக் காரணமாக அமைந்தார். இந்நடவடிக்கை மூலம் எந்தவொரு காரணத்திற்காகவும் நலிவுற்று மூடும் நிலை ஏற்படும் வங்கியில் பணியாற்றும் ஊழியர்களின் பணிப் பாதுகாப்பிற்கும், வாடிக்கையாளர்களின் வைப்புத்தொகைக்கும் உத்திரவாதம் ஏற்பட்டது.

இருதரப்பு ஊதிய ஒப்பந்தம் - அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் முன்னோடிச் சாதனை

1962ம் ஆண்டு மீண்டும் பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம், 1957ம் ஆண்டு முதல் 1967ம் ஆண்டுவரை பாராளுமன்ற உறுப்பினராக செயல்பட்டு வங்கி ஊழியர் மற்றும் வங்கித்துறை தொடர்பான பிரச்சனைகளை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றார் தோழர் பிரபாத்கர்.

தோழர் பிரபாத்கரின் சீரிய தலைமை மற்றும் வழிகாட்டுதலில் நடைபெற்ற வலிமைமிகு போராட்டங்களின் விளைவாக முதன்முறையாக வங்கித்துறையில் வரலாற்றுச் சிறப்புமிக்க இருதரப்பு ஒப்பந்தம் 1966ம் ஆண்டு வென்றெடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, தோழர் பிரபாத்கர் முன்னெடுத்து நடத்திய வலிமையான பிரச்சாரங்கள் மற்றும் போராட்ட நடவடிக்கைகளின் காரணமாக அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் சாதனையில் மணிமகுடமாக தனியார் துறையிலிருந்த வங்கிகள் 1969ம் ஆண்டு அரசுடைமை ஆக்கப்பட்டன.

வங்கித்துறையின் கொள்கை முடிவுகளை வகுப்பதில் ஊழியர்களுக்கும் உரிமை

வங்கிகள் தேசியமய சாதனைக்குப் பின்பு, 1973ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் 17வது மாநாட்டில், நாட்டு நலன் மற்றும் தொழில் துறை வளர்ச்சிக்கு பொதுத்துறை வங்கிகள் ஆற்ற வேண்டிய கடமை, கடன் கொள்கைகள் போன்றவற்றில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கமும் அதன் உறுப்பினர்களும் கவனம் செலுத்த வேண்டுமென்பதை சங்கத்தின் புதிய அணுகுமுறையாக தோழர் பிரபாத்கர் பிரகடனப்படுத்தினார்.



1975ல் தோழர் பர்வானாவின் மறைவுக்குப் பிறகு, தோழர் பிரபாத்கரின் இயக்கப் பணிச்சுமை அதிகமானது. மூன்றாம் இருதரப்பு ஒப்பந்தத்திற்கு அன்றைய ஒன்றிய அரசு தடையாக இருந்தபோது, தோழர் பிரபாத்கர் 'சட்டப்படி வேலை செய்தல்', குறுகிய இடைவெளிகளில் வேலை நிறுத்தம் செய்தல் போன்ற வலிமைமிகு தொடர் போராட்டங்களை அறிவித்து, அரசாங்கத்தினைப் பணியச் செய்து மூன்றாவது இருதரப்பு ஒப்பந்தத்தை வென்றெடுத்தார்.

அதே காலகட்டத்தில், வங்கி அதிகாரிகளை ஒன்றிணைத்து **AIBOA** அமைப்பினை துவக்கி, அதன் நிறுவனத் தலைவராகவும் தோழர் பிரபாத்கர் விளங்கினார். 1953ம் ஆண்டிலிருந்து 1980 வரை அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளராகவும், 1980லிருந்து 1984 வரையில் தலைவராகவும் தொடர்ந்து இடைவிடாது சங்கப் பணிகளில் முழுமூச்சாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்த சூழலில், 1984ம் ஆண்டு நவம்பர் 27ம் நாளன்று இரவு தொழிற்சங்க நிகழ்ச்சியொன்றில் பங்கேற்க பயணம் செய்துகொண்டிருந்த பொழுது தன் இன்னுயிர் நீத்தார் தோழர் பிரபாத்கர்.

தோழர் பிரபாத்கர் அவர்களை என்றும் நினைப்போம் - அவர் காட்டிய வழி தொடர்வோம்

தன் இறுதி மூச்சு வரையில் வங்கி ஊழியருக்காகவும், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்திற்காகவும் தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் தியாகம் செய்தார் தோழர் பிரபாத்கர். வங்கி ஊழியர்களின் நெஞ்சினில் என்றென்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் தோழர் பிரபாத்கர் போன்ற தலைவர்கள் இயக்கத்திற்கு கிடைப்பது மிகவும் அரிதாகும்.

வங்கி ஊழியர்களை ஒன்றிணைத்து, அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தினை கட்டமைத்து, அதனை மாபெரும் சக்தியாக உருவாக்கி, மறைந்தாலும் என்றென்றும் நம்மை நம்பிக்கையுடன் வழி நடத்தி வாழ்ந்து கொண்டிருக்கும் தோழர் பிரபாத்கரின் பிறந்த நாளில் அவரை என்றென்றும் நன்றியுடன் நினைவு கூர்வோம்.



"அமைப்பு இல்லையேல் நாம் நிராயுதபாணிகள்
அமைப்பாகத் திரண்டால் நாம் பெரும் போர்ப்படை
போராட்டங்களே நம் ஆயுதம் - ஒற்றுமைதான் நமது கவசம்"
- தோழர் பிரபாத்கர்.